**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா.7** **Date : 20.01.2026.**

| Name : சின்னபையன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வெள்ளாரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனது சின்னதாயி ஆவார். கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக பைபாஸில் விபத்து நடந்தது. புல் பிடுங்க நடந்து சென்ற போது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக சின்னதாயி என்பவருக்கு காயம் ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் இறந்து போய்விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக் கொண்டதால் பிரேத விசாரணையில் நான் கையொப்பம் செய்தேன். மற்ற விவரம் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா.8** **Date : 20.01.2026.**

| | |
|---|---|
| **Name : சத்தியநாதன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் உப்பாரப்பட்டி காட்டு வளவில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனது சித்தப்பன் மனைவி சின்னதாயி ஆவார். கடந்த 2025 ம் வருடம் மாலை நேரத்தில் மாட்டிற்கு சின்னதாயி என்பவர் நடந்து சென்று புல் பிடுங்க சாலையை கடக்கும் போது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக சின்னதாயி என்பவருக்கு காயம் ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் இறந்து போய்விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் மற்றும் சின்னபையன் ஆகியோர் காவல் நிலையத்திற்கு சென்று சாட்சிகாக வேண்டி கையொப்பம் செய்தோம் என்றால் ஆமாம். சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக் கொண்டதால் பிரேத விசாரணையில் நான் கையொப்பம் செய்தேன். மற்ற விவரம் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 20.01.2026.**

| | |
|---|---|
| **Name : அருண்ராஜமாணிக்கம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ப்ரீத்தம் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.02.2025 ம் தேதியன்று மாலை 07.00 மணியளவில் ப்ரீத்தம் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திருமதி.சின்னதாயி வயது 60, க/பெ கணேசன் என்பவரை அவருடைய மகன் ராஜ் என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 03.02.2025 –ம் தேதி மாலை 6 மணிளவில் சின்னதாயி என்பவர் சாலையில் நடந்து சென்ற போது உப்பாரப்பட்டி பிரிவு அருகே வெள்ளார் தொப்பூர் என்ற இடத்தில் இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) இடது பக்க கண் புருவத்திற்கு மேல் காயம் 2) தலையில் காயம், 3) வலது கை மேல் பகுதி, முழங்கையில் காயம், 4) வலது பக்க நுரையீரல் பலு எலும்பு முறிவு மற்றும் 5) வலது பக்க தொடை எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு 10.02.2025 ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது.

3) போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ–3** ஆகும். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) விபத்து ஏற்பட்டது குறித்து சின்னதாயி என்னிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். அவருக்கு ஏற்பட்ட காயம் எதானல் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் ஆமாம். என் மருத்துவமனையில் 7 நாட்கள் விபத்தில் அடிப்பட்டவர் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தோ, நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது குறித்தோ, காயத்தின் தன்மை குறித்தோ எதுவும் சான்று வழங்கப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவர் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக மருத்துவமனையில் இருந்து வெளியேறியதால் காயச்சான்று வழங்கவில்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**